StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## SUMMATIVE ASSESSMENT - I ( 2013-2014 )

**CLASS : IX**

| | | |
|---|---|---|
| **Maximum Marks : 90** | **TAMIL** | **Time : 3 hours** |
| மதிப்பெண்கள் : 90 | | நேரம் : 3 மணி |

## தமிழ்

The question paper is diveded into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | : A | Reading Comprehension | - 15 Marks |
| பிரிவு | : அ | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : B | Writing | - 20 Marks |
| பிரிவு | : ஆ | எழுதுதல் | - 20 மதிப்பெண்கள் |
| SECTION | : C | Grammar | - 15 Marks |
| பிரிவு | : இ | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : D | Literature / Textbooks | - 40 Marks |
| பிரிவு | : ஈ | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | - 40 மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ வினாத்தாள் 14 பக்கங்களைக் கொண்டது.

## பகுதி – I

**அ ) பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

கடல்வாழ் உயிரினங்களில் கணவாய் என்பது ஒருவகை. கணவாய்களுக்குக் கால்கள் தலையிலிருந்தே முளைத்திருக்கும். அதனால் இவற்றைத் தலைக்காலிகள் எனவும் அழைப்பர். கணவாயில் பலவகை உண்டு. ஓட்டுக்கணவாய், கூந்தற்கணவாய், பேய்க்கணவாய் என்பன அவை. கடற்கரையோரங்களிலும், கடலின் ஆழமான பகுதிகளிலும் அவை வாழ்கின்றன. கடற்பாறைகளிலும், ஊனத்திட்டுகளின் இடையிலும் இவை காணப்படுகின்றன. கணவாயின் உடல் நுங்கைப் போல் மிருதுவாக இருக்கும். கணவாய்களுக்கு எட்டு அல்லது பத்துக் கால்கள் இருக்கும். கால்களின் நடுவில் இதன் வாய் அமைந்துள்ளது. கணவாய்கள் வேண்டும்போது தம் நிறத்தை மாற்றிக்கொள்ளும். இவை தம் உடம்பிலிருந்து செப்பியா் என்னும் மையைக் கக்குவதால் தன்னைத் தின்ன வரும் விலங்குகள் மீது பட்டு அவை மோப்ப உணா்ச்சியற்றுப் போகும். இவை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**வினாக்கள்** **5 x 1 = 5**

1 ) கணவாயின் கால்கள்

அ ) நீண்டு காணப்படும்

ஆ) தலையிலிருந்தே முளைத்திருக்கும்

இ ) மிகவும் சிறியவை

ஈ ) வளைந்து காணப்படும்

2 ) கணவாய்கள் காணப்படும் பகுதிகள்

அ ) மலைப்பகுதிகள்

ஆ) பாலைநிலங்கள்

இ ) கடலின் ஆழப்பகுதிகள்

ஈ ) வயல்வெளிகள்

3 ) கணவாயின் உடல்

அ ) நுங்கைப் போல் மிருதுவானது

ஆ) தேக்கைப் போல் உறுதியானது

இ ) பசுமை நிறமுடையது

ஈ ) செதில்களால் மூடப்பட்டது

4 ) கணவாய்க்கு

அ ) எட்டு முதல் பத்து கால்கள் இருக்கும்

ஆ) மூன்று முதல் நான்கு கால்கள் இருக்கும்

இ ) இரண்டு கால்கள் காணப்படும்

ஈ ) ஆறு கால்கள் காணப்படும்

5 ) கணவாய்கள் தங்களைத் தின்ன வரும் விலங்கிடமிருந்து தம்மைக் காக்க

அ ) செப்பியா் எனும் மையைக் கக்கி எதிரியைக் கொல்லும்

ஆ) செப்பியா் எனும் மையைக் கக்கி எதிரியை மோப்ப உணர்ச்சியற்று போகச்செய்யும்

இ ) செப்பியா் எனும் மையைக் கக்கி எதிரியின் கண்களைக் குருடாக்கும்

ஈ ) செப்பியா் எனும் மையைக் கக்கி எதிரியை மயக்கமடையச் செய்யும்.

ஆ) சிலப்பதிகாரத்தின் ஆசிரியா் இளங்கோவடிகள். இவா் சேர மரபினா். இளங்கோவடிகள் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் நற்சோணை. இவரது தமையன் சேரன் செங்குட்டுவன். " இளையவரான இளங்கோவே நாடாள்வார்" என்று கணியன் கூறியக் கருத்தைப் பொய்ப்பிக்கும் பொருட்டு, இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

கோட்டத்தில் தங்கினார். இளங்கோவடிகள் அரசியல் வேறுபாடு கருதாதவர். இவர் சமய வேறுபாடற்ற துறவி. இவருடைய காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு. இளங்கோவடிகள் சிறப்புணர்ந்த பாரதி யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை எனப் புகழ்கிறார்.

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

1 ) **இளையவரான இளங்கோவே நாடாள்வார் எனக் கூறியவர் யார் ?**

அ ) இளங்கோவின் தந்தையார்

ஆ) இளங்கோவின் தமையன்

இ ) கணியன்

ஈ ) நாட்டு மக்கள்

2 ) **நற்சோணை யார் ?**

அ ) சேரன் செங்குட்டுவனின் தமக்கை

ஆ) இளங்கோவின் தங்கை

இ ) இளங்கோவின் ஆசிரியர்

ஈ ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மனைவி

3 ) **இளங்கோவடிகள் எந்த மரபைச் சார்ந்தவர் ?**

அ ) சோழ மரபினர்

ஆ) சேர மரபினர்

இ ) பாண்டிய மரபினர்

ஈ ) மங்கோலிய மரபினர்

4 ) **இளங்கோ துறவு பூண்டு தங்கிய இடம் எது ?**

அ ) கோட்டை வாசல்

ஆ) மலைக்கோட்டை

இ ) கோட்டையம்பலம்

ஈ ) குணவாயிற்கோட்டம்

5 ) **இளங்கோ வாழ்ந்த காலம் யாது ?**

அ ) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு

ஆ) கி.மு. மூன்றாம் நூற்றாண்டு

இ ) கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

ஈ ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

இ ) இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி - சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி.1730 ஆம் ஆண்டு ஒரே பெண்மகவாகத் தோன்றியவர் வேலு நாச்சியார்.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

பெற்றோரால் ஆண்வாரிசைப் போன்று வளர்க்கப்பட்டு, ஆயுதப்பயிற்சிமுதல் அனைத்தையும் கற்றுத்தேர்ந்தார். வீரமும்,நுட்பமான அறிவும் உடையவராகத் திகழ்ந்தார். சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் வேலு நாச்சியாரை மணந்து கொண்டார். ஆங்கிலேயர் 1772 ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின் மீது படையெடுத்தனர்.ஆங்கிலேயருக்கும்,முத்துவடுகநாதருக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. அப்போரில் மன்னர் முத்துவடுகநாதர் வீரமரணம் அடைந்தார். வேலுநாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார். ஐதர் அலி ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார். மருது சகோதரர்களுடன் வீரர்படைக்குத் தலைமையேற்றுச் சென்று ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார்.அப்போரில் கணவரைக் கொன்றவர்களை வென்று 1780 ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

**வினாக்கள்** **5 x 1 = 5**

1 ) **இராமநாதபுரத்தை ஆண்ட மன்னன்**

அ) செல்லமுத்து சேதுபதி

ஆ) முத்துவடுகநாதர்

இ) மருது சகோதரர்கள்

ஈ ) ஐதர் அலி

2 ) **வேலு நாச்சியார்**

அ) பயந்த சுபாவம் உடையவர்

ஆ) அனிச்சமலர் போன்றவர்

இ) எளிமையான தோற்றமுடையவர்

ஈ ) வீரமும், நுட்பமான அறிவும் உடையவர்

3 ) **சிவகங்கை மது  ஆங்கிலேயர்கள் படையெடுதத ஆண்டு**

அ) 1712

ஆ) 1772

இ ) 1727

ஈ ) 1780

4 ) **முத்துவடுகநாதர்**

அ) வேலு நாச்சியாரின் சகோதரன்

ஆ) வேலு நாச்சியாரின் கணவன்

இ) வேலு நாச்சியாரின் தந்தை

ஈ ) வேலு நாச்சியாரின் குரு



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

5 ) ஐதர் அலி வேலு நாச்சியாருக்கு

அ) ஐயாயிரம் பொன் வழங்கி உதவினார்

ஆ) ஐயாயிரம் வராகன் வழங்கி உதவினார்

இ) ஐயாயிரம் வெள்ளி வழங்கி உதவினார்

ஈ ) ஐயாயிரம் படை வீரர்களை வழங்கி உதவினார்

## பகுதி – II 1 x 8 = 8

1 ) நீ கண்டு களித்த இன்பச்சுற்றுலா குறித்து தோழன் அல்லது தோழிக்குக் கடிதம் எழுதுக.

( அல்லது )

தெரு மின்விளக்குப் பழுது நீக்க வேண்டி மின்வாரியச் செயற்பொறியாளருக்குக் கூட்டு **விண்ணப்பம்** எழுதுக.

**எக்கடிதமாயினும் உமது முகவரி,**

தமிழ்ச்செல்வன் / தமிழ்ச்செல்வி , கபிலர் நகர், மதுரை - 625 002.

1 x 8 = 8

2 ) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.**

அ) முன்னுரை - சிக்கனம் - சிறு சேமிப்பு - சேமிப்பின் தேவை - சேமிக்கும் வழிமுறைகள் - சேமிப்பின் பயன்கள் - முடிவுரை.

ஆ) முன்னுரை - புரட்சித்தலைவர் எம.ஜி.இராமச்சந்திரன் - தோற்றம் - இளமை வாழ்க்கை - திரைப்படத்தில் எம்.ஜி.ஆர் - அரசியல் ஈடுபாடு - தமிழக முதல்வர் - முடிவுரை.

ஆ) முன்னுரை - கல்வியின் சிறப்பு - கற்றலுக்குரிய பருவம் - ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது - பசுமரத்தாணி போல் பதியும் - நினைவாற்றல் வளர்ச்சி - முடிவுரை.

3 ) ஊனமுற்றோர் நடத்திய கலைநிகழ்ச்சி பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக. 1 x 4 = 4

( அல்லது )

பிளாஸ்டிக் பொருட்கள் ஒழிப்பு முகாம் பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி - III

அ) சான்று தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1 ) இசைநிறை அளபெடை

அ) கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

ஆ) கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

இ) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

ஈ ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

2 ) ஒற்றளபெடை

அ) நசைஇ

ஆ) அரங்ங்கம்

இ) படாஅர்

ஈ) தழீஇ

3 ) காரியவாகு பெயர்

அ) பாலை இறக்கு

ஆ) திருவள்ளுவரைக் கற்றேன்

இ) மூன்று மீட்டர் கொடு

ஈ) சமையல் கற்றேன்

4 ) பண்புப்பெயர்

அ) பெற்றான்

ஆ) மாட்சி

இ) ஆடினாள்

ஈ) மாநகர்

5 ) தன்மை ஒருமைப் பெயர்

அ) நாம்

ஆ) யாம்

இ) நாங்கள்

ஈ ) நான்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

ஆ) நிரப்புக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1 ) செம்மை, வெண்மை என்பது __________ .

அ) நிறப்பண்புப் பெயர்
ஆ) வடிவப்பண்புப் பெயர்
இ) அளவுப்பண்புப் பெயர்
ஈ) சுவைப்பண்புப் பெயர்

2 ) பதம் __________ வகைப்படும்.

அ) நான்கு
ஆ) இரண்டு
இ) மூன்று
ஈ ) எட்டு

3 ) பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு ____________.

அ) பகுதி
ஆ) சந்தி
இ) சாரியை
ஈ ) விகாரம்

4 ) எதிர்கால இடைநிலை அமைந்துள்ள வினைச்சொல் ___________.

ஆ) வருவான்
ஆ) பார்த்தான்
இ) உண்கிறான்
ஈ ) வென்றான்

5 ) இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் ____________ எனப்படும்.

அ) வினைமுற்று
அ) பகாப்பதம்
இ) வழு
ஈ) வழாநிலை



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

இ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1 ) கண்டான் (பகுதியை எடுத்து எழுதுக )

அ) கண்

ஆ) காண்

இ) ஆன்

ஈ ) அன்

2 ) நாய் கத்தும் ( வழு நீக்கி எழுதுக )

அ) நாய் ஊளையிடும்

ஆ) நாய் குரைக்கும்

இ) நாய் உறுமும்

ஈ ) நாய் அலறும்

3 ) செய்தான் ( இடைநிலையை எடுத்து எழுதுக )

அ) இன்

ஆ) த்

இ) ட்

ஈ ) க்

4 ) நீ + ஐ ( சேர்த்து எழுதுக )

அ) நீயை

ஆ) நின்னை

இ ) நம்மை

ஈ ) நீரை

5 ) உண்ணாநின்றான் ( இடைநிலையை எடுத்து எழுதுக )

அ) கிறு

ஆ) கின்று

இ) ஆநின்று

ஈ ) இன்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

ஈ) இலக்கணக்குறிப்பு தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1 ) நாரதர் வருகிறார்

அ) சொல்லாகு பெயர்

ஆ) கருத்தாவாகு பெயர்

இ) உவமையாகு பெயர்

ஈ ) தானியாகு பெயர்

2 ) குடிதழீஇ

அ) ஒற்றளபெடை

ஆ) செய்யுளிசை அளபெடை

இ) இன்னிசை அளபெடை

ஈ ) சொல்லிசை அளபெடை

3 ) சித்திரையான்

அ) பொருட்பெயர்ப் பகுபதம்

ஆ) இடப்பெயர்ப் பகுபதம்

இ) காலப்பெயர்ப் பகுபதம்

ஈ ) சினைப்பெயர்ப் பகுபதம்

4 ) உண்

அ) பெயர்ப் பகாப்பதம்

ஆ) வினைப் பகாப்பதம்

இ) இடைப் பகாப்பதம்

ஈ ) உரிப் பகாப்பதம்

5 ) கண்ணகி வந்தான்

அ) பால்வழு

ஆ) திணைவழு

இ) இடவழு

ஈ) காலவழு



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

உ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

1 ) அ) இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது சாரியை எனப்படும்.

ஆ ) இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது சந்தி எனப்படும்.

இ ) இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது விகாரம் எனப்படும்.

ஈ ) இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது பகுதி எனப்படும்.

2 ) அ) மாடு வந்தது - என்பது திணை வழு ஆகும்.

ஆ) மாடு வந்தது - என்பது பால் வழு ஆகும்.

இ) மாடு வந்தது - என்பது திணை வழாநிலை ஆகும்.

ஈ ) மாடு வந்தது - என்பது பால் வழாநிலை ஆகும்.

3 ) அ) முட்டையிட்டது சேவலா? பெட்டையா? - என்பது விடைவழு ஆகும்.

ஆ) முட்டையிட்டது சேவலா? பெட்டையா? - என்பது வினாவழு ஆகும்.

இ) முட்டையிட்டது சேவலா? பெட்டையா? - என்பது மரபுவழு ஆகும்.

ஈ ) முட்டையிட்டது சேவலா? பெட்டையா? - என்பது பால்வழு ஆகும்.

4 ) அ) இல், அல், ஆ முதலியன எதிர்மறை இடைநிலைகள் ஆகும்.

ஆ) இல், அல், ஆ முதலியன எதிர்கால இடைநிலைகள் ஆகும்.

இ) இல், அல், ஆ முதலியன நிகழ்கால இடைநிலைகள் ஆகும்.

ஈ) இல், அல், ஆ முதலியன இறந்தகால இடைநிலைகள் ஆகும்.

5 ) அ) அகழ்வார் - என்பது தொழிற் பெயர் ஆகும்.

ஆ) அகழ்வார் - என்பது முதனிலை திரிந்த தொழிற் பெயர் ஆகும்.

இ) அகழ்வார் - என்பது பண்புப்பெயர் ஆகும்.

ஈ ) அகழ்வார் - என்பது வினையாலணையும் பெயர் ஆகும்.

## பகுதி - IV

**அ) பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

தம் எண்ணங்களையும் கருத்துகளையும் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக விளங்குவது மொழி.உலகில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன.அவற்றுள் தனக்கெனத் தனிச்சிறப்பும் பலமொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழியே மூலமொழி.அதிலிருந்து தோன்றி வளர்ந்த மொழிகள் கிளைமொழிகள்.அவற்றின் பொதுத்தன்மையின் அடிப்படையில் அவற்றை ஒரே மொழிக்குடும்பத்தில் அடக்குவர் மொழியியல் அறிஞர்.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**வினாக்கள்** **5 x 1 = 5**

1 ) **தம் எண்ணங்களையும் கருத்துகளையும் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக விளங்குவது**

அ) இசை

ஆ) மொழி

இ) நடனம்

ஈ ) உணவு

2 ) **மூலமொழி என்பது**

அ) தொன்மையான மொழி

ஆ) கல்வெட்டுகளில் இடம்பெறாத மொழி

இ ) பல்வேறு நாடுகளில் பேசப்படும் மொழி

ஈ ) தனக்கெனத் தனிச்சிறப்பும், பலமொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழி

3 ) **மூலமொழியிலிருந்து தோன்றி வளர்ந்தவை**

அ) கிளை மொழிகள்

ஆ) முதுமொழிகள்

இ) பழமொழிகள்

ஈ ) பொன்மொழிகள்

4 ) **மொழியியல் - பிரித்து எழுதுக.**

அ) மொழி + யியல்

ஆ) மொழி + இயல்

இ ) மொழி + இல்

ஈ ) மொழி + இ + யல்

5 ) **இப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு**

அ) மொழியும் மொழிக்குடும்பமும்

ஆ) தமிழ் மொழி

இ) மொழியியல் அறிஞர்

ஈ ) தமிழர் பண்பாடு

ஆ) பழந்தமிழகத்தின் வணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் பட்டினப்பாலையிலும், மதுரைக்காஞ்சியிலும் காணப்படுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியான பொருள்கள் இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, இஞ்சி, ஏலக்காய், இலவங்கப்பட்டை முதலானவை குறிப்பிடத்தக்கன. தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன. சீனத்துப்பட்டும்,சருக்கரையும் தமிழகத்தில் இறக்குமதி ஆயின. கரும்பு அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவிலிருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**வினாக்கள்** 5 x 1 = 5

1 ) பழந்தமிழகத்தின் வணிகப்பொருள்களைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்ற நூல்

அ) மதுரைக்காஞ்சி

ஆ) திருக்குறள்

இ) திரிகடுகம்

ஈ ) பாஞ்சாலி சபதம்

2 ) தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் ஒன்று

அ) தேக்கு

ஆ) மா

இ ) பலா

ஈ ) வாழை

3 ) சீனாவிலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதியான பொருள்களில் ஒன்று

அ) மயில்தோகை

ஆ) அகில்

இ) சந்தனம்

ஈ ) சீனத்துப்பட்டு

4 ) சீனாவிலிருந்து தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்ட பயிர்

அ) நெல்

ஆ) கோதுமை

இ) கரும்பு

ஈ) இஞ்சி

5 ) கரும்பிலிருந்து கிடைக்கும் உணவுப்பொருள்

அ) உப்பு

ஆ) சருக்கரை

இ) பதநீர்

ஈ ) கருப்புகட்டி

இ ) பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

<u>வினாக்கள்</u> **4 x 1 = 4**

1 ) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

அ) சுரதா

ஆ) காரியாசன்

இ) தேவகுலத்தார்

ஈ ) நக்கீரனார்

2 ) தலைவி தலைவன் மீது கொண்ட அன்பு எதனை விடப் பெரியது ?

அ) மலையை

ஆ) நிலத்தை

இ) கடலை

ஈ ) வானத்தை

3 ) கடலைக் குறிக்கும் சொல் எது ?

அ) கருங்கோல்

ஆ) குறிஞ்சி

இ) சாரல்

ஈ ) நீர்

4 ) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?

அ) புறநானூறு

ஆ) குறுந்தொகை

இ) சிறுபஞ்சமூலம்

ஈ ) முத்தொள்ளாயிரம்

ஈ ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. **2 x 5 = 10**

1 ) திராவிடம் எனும் சொல் பற்றிக் கால்டுவெல் கூறுவன யாவை ?

2 ) பாரதிதாசனின் கவிதைப் போக்கினைப் பற்றி எழுதுக.

3 ) அக்காலத்தில் பூம்புகார் எவ்வாறு விளங்கியது ?

4 ) புலம்பெயர்ந்த தமிழர் தாயகத்துடன் கொண்டுள்ள தொடர்பு எத்தகையது ?

5 ) புதுக்கவிதை தோன்றி வளர்ந்தமுறை பற்றி எழுதுக.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**உ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.** **2 x 4 = 8**

1 ) இறைவனின் இயல்புகளாகக் கம்பன் கூறுவன யாவை ?

2 ) பொறையுடைமையின் சிறப்புகள் யாவை ?

3 ) விதுரனைப் பாண்டவர் எவ்வாறு வரவேற்றனர் ?

4 ) யானை, பகைவர் மார்பில் எழுதியது என்ன ?

**ஊ) பின்வரும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.**

1 ) ரஷீத்துக்கு மாங்கன்று எவ்வாறு கிடைத்தது ? **1 x 8 = 8**

2 ) கண்ணதாசனின் வாழ்வியல் சிந்தனையை விளக்குக.

3 ) கெலன் கெல்லர், தனது கனவில் முதல்நாள் கண்ட காட்சிகள் யாவை ?

www.StudentBounty.com
Homework Help & Pastpapers